இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 06-11-2025

# பழனிசாமியின் இரட்டை வேடம்!

தேர்தல் ஆணையத்தின் சிறப்பு வாக்காளர் பட்டியல் சீர்திருத்தம் குறித்து தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் கடுமையான எதிர்ப்பை தெரிவித்துள்ளன. அனைத்துக் கட்சிக் கூட்டம் நடந்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள கட்சிகள் சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வருகிறது.

**தி.மு.க. எதற்காக எதிர்ப்பு தெரிவிக்கிறது என்பதையே உணராதவர் போல உளறிக் கொண்டிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி. ஆனால் அவரே என்ன செய்கிறார் தெரியுமா? தேர்தல் ஆணையத்தின் இந்த நடவடிக்கையை அ.தி.மு.க.வினர் கண்காணிக்க வேண்டும் என்று உத்தரவு போட்டுள்ளார்.**

அக்டோபர் 29 ஆம் தேதியன்று பழனிசாமி வெளியிட்ட அறிக்கையில், **“அ.தி.மு.க. பூத் கமிட்டி அமைக்கப்பட்ட மாவட்டப் பொறுப்பாளர்கள் சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தப் பணிகளைக் கண்காணிக்க வேண்டும்”** என்று அறிக்கை வெளியிட்டார். பழனிசாமி எதற்காக இதனைக் கண்காணிக்க உத்தரவிட வேண்டும். தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கையை முழுமையாக நம்புகிறவர் எதற்காக கண்காணிக்க வேண்டும்?

‘வாக்காளர் பட்டியல் சிறப்பு சீர்திருத்தப் பணியை அ.தி.மு.க. முழு மனத்துடன் ஆதரிக்கிறது’ என்று முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் சொல்லி இருக்கிறார். “தமிழகத்தில் உள்ள வாக்காளர் பட்டியல் 100 சதவீதம் முழுமையானதாகவும், சரியானவையாகவும் இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்றே சொல்ல வேண்டும். எனவே, இந்திய தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியலில் இரட்டை வாக்குகள், இறந்தவர்கள் மற்றும் இடம் பெயர்ந்தவர்களை நீக்குவதும், புதிதாக தகுதி உள்ளவர்களை சேர்ப்பதும் அவ்வப்போது சுருக்கத் திருத்தம் மற்றும் தீவிர திருத்தம் (Revision மற்றும் Intensive Revision) என்ற முறைகளைப் பின்பற்றி சரியான வாக்காளர் பட்டியலை உறுதிபடுத்துவது இயல்பான ஒரு நடைமுறை.

இந்தியாவின் சிறப்பே ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்துவதுதான். அதற்கு இந்தியா முழுவதும் உள்ள வாக்காளர் பட்டியலை சரிபார்க்க வேண்டும். 2026 சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ள தமிழகத்தில் உள்ள வாக்காளர் பட்டியல் 100 சதவீதம் சரியானதாக இல்லை. எனவே இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தை அ.தி.மு.க. சார்பில் முழு மனதுடன் வரவேற்கிறோம்” என்று அறிக்கை கொடுத்திருந்தார் ஜெயக்குமார்.

தி.மு.க.வும் அதன் கூட்டணிக் கட்சியினரும், தி.மு.க. கூட்டணிக்கு வெளியில் இருக்கும் கட்சிகள் கூட, வாக்காளர் பட்டியல் சீர்திருத்தத்தை எதிர்க்கவில்லை. எதற்கு அவசரமாகச் செய்கிறீர்கள்? எதற்காக மழை காலத்தில் செய்கிறீர்கள்? எதற்காக தேர்தல் நெருக்கத்தில் செய்கிறீர்கள்? என்றுதான் கேட்கிறார்கள்.

**‘S.I.R. நடவடிக்கையை தி.மு.க. எதிர்த்தால், SIR நடவடிக்கையை அ.தி.மு.க. ஆதரிக்கும்’** என்றும் அதிமேதாவி ஜெயக்குமார் சொல்லி இருக்கிறார். அதே நேரத்தில் இன்னொரு பக்கம் என்ன செய்கிறது அ.தி.மு.க.?

S.I.R. நடவடிக்கையானது அ.தி.மு.க.வையும் பதற வைத்துள்ளது என்பதுதான் உண்மை. அ.தி.மு.க.வில் மாவட்டப் பொறுப்பாளர்கள் கூட்டம் கடந்த 2 ஆம் தேதியன்று பழனிசாமி தலைமையில் நடந்துள்ளது. இக்கூட்டத்தில் என்ன தீர்மானம் போட்டுள்ளார்கள் தெரியுமா?

“1.1.2026 ஐ தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு, சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருவதால், முறையான வாக்காளர் பட்டியல் தயார் செய்வதற்கு ஏதுவாக, கழகத்தின் சார்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக வாக்காளர் பட்டியலில் உள்ள குளறுபடிகளை சரிசெய்வதற்குத் தேவையான உடனடி நடவடிக்கைகளை, சம்பந்தப்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் உறுதுணையோடு, தங்களுக்கான மாவட்டங்களுக்கு நேரில் சென்று, சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணியினை கண்காணித்து, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இப்பணியை முழுமையாக செய்து முடித்து, அதன் விபரங்களை தலைமைக் கழகத்துக்கு தெரிவிக்க வேண்டும்” என்று பழனிசாமி சொன்னதாக அ.தி.மு.க. தலைமைக் கழகம் செய்தி வெளியிட்டுள்ளது.

‘பழனிசாமியின் ஒப்புதலோடு இந்தச் செய்தி வெளியிடப்படுகிறது’ என்று அந்த செய்திக் குறிப்பு சொல்கிறது. இதைப் பார்த்து பழனிசாமி என்ன சொல்லி இருக்க வேண்டும்? **‘நியாயமாக தேர்தல் ஆணையம் நடந்து கொள்ளும், பிறகு எதற்காக நாம் ஏன் கண்காணிக்க வேண்டும்?’** என்று அல்லவா பழனிசாமி கேட்டிருக்க வேண்டும்?

மாறாக வாக்காளர் பட்டியல் திருத்தப் பணியைக் கண்காணிக்க வேண்டும் என்று எதற்காக பழனிசாமி சொல்ல வேண்டும்? கட்சிக்காரர்களுக்கு ஏன் உத்தரவு போட வேண்டும்?

**‘சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தப் பணியை கண்காணிக்க வேண்டும் - அ.தி.மு.க. மாவட்டப் பொறுப்பாளர்களுக்கு எடப்பாடி பழனிசாமி அறிவுறுத்தல்’** என்றுதான் அனைத்து நாளிதழ்களும் பழனிசாமியின் செய்தியை வெளியிட்டுள்ளன. அப்படியானால் பழனிசாமிக்கே, தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கை மீது சந்தேகம் இருப்பதாகத்தானே அர்த்தம்?

**‘பா.ஜ.க.வுக்குப் பயந்துதான் பழனிசாமி இதை வெளிப்படையாகப் பேச மறுக்கிறார்’** என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதுதானே உண்மை? பா.ஜ.க.வுக்குப் பயந்து தமிழ்நாட்டின் அனைத்து நலன்களையும் பலி கொடுத்தவர்தான் பழனிசாமி. அதே செயலைத்தான் இப்போதும் செய்கிறார்.

**“தமிழ்நாட்டுக்கு எதிராக எந்தச் சட்டம் வந்தாலும் பரவாயில்லை, இரட்டை இலை சின்னம் முடக்கப் படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக ஆமாம் சாமி போடும் நிலையில் இருக்கிறார் பழனிசாமி. துரோகத்துக்கு மட்டுமல்ல; அடிமைத்தனத்துக்கும் பழனிசாமிக்குத்தான் நோபல் பரிசு தரவேண்டும்”** என்று சொல்லி இருக்கிறார் துணை முதலமைச்சர் மாண்புமிகு உதயநிதி அவர்கள்.

**இன்னும் எத்தனை உரிமைகளைத்தான் பழனிசாமி காவு கொடுக்கப் போகிறாரோ?**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.11.2025) சென்னை, இராயபுரத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மோகனா ஹீரோ – பிரீமியா விற்பனையகத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற,சட்டமன்ற உறுப்பினர்கள், திருமதி துர்கா ஸ்டாலின், திருமதி செல்வி செல்வம், மு.க.தமிழரசு, திருமதி மோகனா தமிழரசு, ஹீரோ மோட்டோகார்ப் லிமிடெட் நிறுவனத்தின் மண்டல விற்பனைத் தலைவர் ராமுராவ், பேராசிரியர் அவர்களின் புதல்வர் அ.அன்புச்செல்வன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கோவை சம்பவம் மனிதத்தன்மையற்றது;

# குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, நவ.6-**

**கோவையில் நடைபெற்ற துயரம் மனிதத்தன்மையற்றது. பிடிபட்ட குற்றவாளிகளுக்கு அதிகப்பட்ச தண்டனை விரைந்து கிடைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**கோவையில் இளம்பெண்ணுக்கு நிகழ்ந்த துயரம் மனிதத் தன்மையற்றது; இத்தகைய கொடூர குற்றச் செயல்களைக் கண்டிக்க எந்தக் கடுஞ்சொல்லும் போதாது.**

**இதில் ஈடுபட்ட குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, உடனடியாகக் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒரு மாதத்திற்குள் குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்து, அவர்களுக்கு அதிகபட்ச தண்டனையை விரைந்து பெற்றுத் தர, காவல்துறையினருக்கு உத்தரவிட்டுள்ளேன்.**

**மேலும் மேலும் நம் மகளிர் அனைத்துத் துறைகளிலும் அடையும் முன்னேற்றம்தான் இத்தகைய வக்கிர மிருகங்களின் ஆணாதிக்க மனநிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும்; முழுமையான முற்போக்குச் சமூகமாக நாம் மாறுவதற்கு வழி வகுக்கும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### எது வந்தாலும் எதிர்த்து நிற்போம்! அதில் எந்த மாற்றமும் இல்லை!

# அடிக்க அடிக்க பந்து மாதிரி எழுந்திருக்க வேண்டும்!

## திருவாரூர் – பாக முகவர்கள் கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!



**திருவாரூர், நவ.6-**

**“எது வந்தாலும் எதிர்த்து நிற்போம்; அதில் எந்த மாற்றமும் இல்லை. அடிக்க அடிக்க பந்து மாதிரி எழுந்திருக்க வேண்டும். விட்டு விட்டுப் போகக் கூடாது” என்று கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் திருவாரூரில் நடைபெற்ற “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” பாக முகவர்கள் கூட்டத்தில் பேசும்போது கூறினார்.**

திருவாரூர் மாவட்ட தி.மு.க. சார்பில், ‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி’ பாக நிலை முகவர்களுக்கான கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மாவட்டச் செயலாளர் பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், கட்சியின் முதன்மைச் செயலாளரும், திருச்சி மண்டலப் பொறுப்பாளருமான அமைச்சர் கே.என். நேரு அவர்கள் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று பேசியதாவது:

வாக்காளர் பட்டியல் வேலையை நாம் சரியாக செய்து விட்டால், நமக்கு பாதி வெற்றி உறுதியாகிவிடும். தி.மு.க. கூட்டணியில் இருப்பவர்கள் வெளியே சென்றுவிடுவார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி கூறினார். ஆனால், நமது கூட்டணியில் இருந்து இதுவரை யாரும் வெளியே செல்லவில்லை.

ஆனால் அவருடன் இருப்பவர்களில், பா.ம.க. இரண்டாக பிரிந்து விட்டது. தே.மு.தி.க. வெளியேறி விட்டது. சசிகலா, டி.டி.வி., ஓ.பி.எஸ்., செங்கோட்டையன் என அ.தி.மு.க. செதில், செதிலாக பிரிந்து கிடக்கிறது. நாம் அப்படியேதான் ஒற்றுமையாக இருக்கிறோம்.

தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை இரண்டாவது முறையாக முதல்வராக, ஆட்சிக் கட்டிலில் அமரவைப்பதுதான் நமது கடமை.

தி.மு.க.வில் இருக்கும் ஒவ்வொருவரையும் குறி வைத்து அடிப்பதற்கு பா.ஜ.க. தயாராகி விட்டது.

எது வந்தாலும் நிற்போம்; அதில் எந்த மாற்றமும் இல்லை. அடிக்க அடிக்க பந்து மாதிரி எழுந்திருக்க வேண்டுமே தவிர, விட்டு விட்டு போகக்கூடாது.

இவ்வாறு அமைச்சர் கே.என். நேரு அவர்கள் பேசினார்.

### கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதி

# பாக முகவர்கள் பயிற்சிக் கூட்டம்!

## வே.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது!

தென்காசி, நவ.6-

தென்காசியில் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தென்காசி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட (BLA 2)பாக முகவர்கள் மற்றும் (BDA) பூத் டிஜிட்டல் ஏஜென்ட் ஆகியோர்களுக்கான பயிற்சிக் கூட்டம்.

தென்காசி ஜெகநாத் அரங்கில் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் தென்காசி தொகுதி பார்வையாளர் கலைக்ககதிரவன் முன்னிலையில் நடைபெற்றது. தென்காசி நகரச் செயலாளர் சாதிர் வரவேற்றார்.

இந்நிகழ்வில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் ரவிச்சந்திரன், துணைச் செயலாளர் ராஜா முகமது ஆகியோர் பங்கேற்று பாக முகவர்களுக்கு பயிற்சி அளித்தனர்.

கூட்டத்தில் பங்கேற்ற ஒன்றிய, நகர, பேரூர்ச் செயலாளர்களுக்கு மாவட்டப் பொறுப்பாளர் வே. ஜெயபாலன் கைக்கணிநி வழங்கினார்.

நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சேசுராஜன், பொதுக்குழு உறுப்பினர்கள் இராஜேஸ்வரன், அருள், ஒன்றியச் செயலாளர்கள் அன்பழகன், அழகுசுந்தரம், ரமேஷ், சீனித்துரை, சேக்முகமது, ஜெயா, சுரண்டை நகரச் செயலாளர் கணேசன், பேரூர்ச் செயலாளர்கள் மேலகரம் சுடலை, குற்றாலம் குட்டி, இலஞ்சி முத்தையா, பண்டாரம், மாவட்ட அணி அமைப்பாளர்கள் கிருஷ்ணராஜா, தங்கராஜ் பாண்டியன், அழகுதமிழ் சங்கர் தங்க பாண்டியன், தென்காசி நகர நிர்வாகிகள் பால்ராஜ், ராம்துரை, ஷேக்பரீத், மைதீன் பிச்சை, மைதீன், சன் ராஜா, சபரி சங்கர், சங்கர் ராஜன், ராமராஜ், மோகன்ராஜ், இசக்கி ரவி உட்பட பாக முகவர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” என்ற தலைப்பின் கீழ் வாக்காளர் திருத்தப் பட்டியலை விரைவாக மேற்கொள்ளவும், அதில் உள்ள குறைபாடுகளை எப்படி சரி செய்வது உள்ளிட்டவை குறித்து எடுத்துரைக்கப்பட்டது.



சென்னை, கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலக கூட்டரங்கில் நேற்று முன்தினம் (04.11.2025) அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அரசுத் தேர்வுகள் இயக்ககம் சார்பில் மார்ச் / ஏப்ரல் 2026ல் நடைபெறவுள்ள இடைநிலை, மேல்நிலை முதலாம் ஆண்டு (Arrear) மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கான தேர்வுக்கால அட்டவணையை வெளியிட்டு, அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கான பணி ஆய்வினை மேற்கொண்டார். இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மரு. பி.சந்தர மோகன், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இயக்குநர் மற்றும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் மரு. மா.ஆர்த்தி மற்றும் பள்ளிக் கல்வித்துறை உயர் அலுவலர்கள், அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.